# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


## அனைத்துலகத் தேர்வு

## 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

TEDC

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்

   அ) 100 ☐ ஆ) 147 ☐

   இ) 20 ☐ ஈ) 30 ☐

2. கடலில் மூழ்கிப்போன குமரிக்கண்டம் பற்றிய செய்தியைக் கூறும் நூல்

   அ) கலித்தொகை ☐ ஆ) நாலடியார் ☐

   இ) மூதுரை ☐ ஈ) நல்வழி ☐

3. போர், கொடை, பொருள் என்பன பற்றிக் கூறுவது

   அ) அகம் ☐ ஆ) அறம் ☐

   இ) புறம் ☐ ஈ) வரம் ☐

4. மென்தொடர்க் குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டு

   அ) சால்பு ☐ ஆ) பந்து ☐

   இ) அழகு ☐ ஈ) பாக்கு ☐

5. தமிழரது குருதியில் விளைந்த பெருந்தோட்டப்பயிர்கள்

   அ) தேயிலையும் இறப்பரும் ☐ ஆ) இறப்பரும் பயறும் ☐

   இ) தேயிலையும் கடலையும் ☐ ஈ) கோப்பியும் பயறும் ☐

6. கடலும் கடல் சார்ந்த இடமும்

   அ) குறிஞ்சி ☐ ஆ) முல்லை ☐

   இ) நெய்தல் ☐ ஈ) மருதம் ☐

7. உலகின் முதன் மொழி தோன்றிய இடம் குமரிக்கண்டம் எனக் கூறியவர்

அ) தேவநேயப்பாவாணர் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

இ) விபுலாநந்த அடிகள் ☐ ஈ) ஆறுமுகநாவலர் ☐

8. சோலையில் செவ்வழிப் பண்ணை இசைத்தவை

அ) குயில்கள் ☐ ஆ) அன்னங்கள் ☐

இ) மயில்கள் ☐ ஈ) தும்பிகள் ☐

9. காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன். இதில் பரிதி என்பது

அ) திங்கள் ☐ ஆ) வானம் ☐

இ) ஞாயிறு ☐ ஈ) நிலா ☐

10. சொல்லியத்தில் பொருட்களை எண்ணும் இடங்களில் வரும் குறியீடு

அ) முற்றுப்புள்ளி ☐ ஆ) காற்புள்ளி ☐

இ) முக்காற்புள்ளி ☐ ஈ) அரைப்புள்ளி ☐

11. வெண்மை என்ற சொல்

அ) சினைப்பெயர் ☐ ஆ) குணப்பெயர் ☐

இ) தொழிற்பெயர் ☐ ஈ) காலப்பெயர் ☐

12. பாடினான் என்ற வினைமுற்றின் வினையெச்சம்

அ) பாடு ☐ ஆ) பாடிய ☐

இ) பாடி ☐ ஈ) பாடுதல் ☐

13. அவுத்திரேலியா, ஆபிரிக்கா என்ற பெருநிலப்பரப்புகள் பிரிந்து போனதற்கான கரணியம்

அ) போர் ☐ ஆ) நோய் ☐
இ) அரசியல் ☐ ஈ) கடற்கோள் ☐

14. நடனக்குலப் பெண்

அ) விறலி ☐ ஆ) பாடினி ☐
இ) இடைச்சி ☐ ஈ) ஆய்ச்சி ☐

15. ______________ தமிழர் உடைமை எனக் கண்ணதாசன் கூறுகிறார்.

அ) மடமை ☐ ஆ) அச்சம் ☐
இ) அஞ்சாமை ☐ ஈ) சோர்வு ☐

16. காரணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மரம் ☐ ஆ) காற்று ☐
இ) வளையல் ☐ ஈ) கட்டில் ☐

17. சிந்துவெளி நாகரிகத்தில் இருந்த நகரங்கள்

அ) மொகஞ்சதாரோ, கரப்பா ☐ ஆ) மதுரை, தஞ்சாவூர் ☐
இ) ஆப்கானித்தான், பாகித்தான் ☐ ஈ) ஈரான்,ஈராக் ☐

18. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆற்றின் பெயர்

அ) காவிரி ☐ ஆ) பஃறுளி ☐
இ) கங்கை ☐ ஈ) வைகை ☐

19. ஆட்புல விரிவாக்கப் புலப்பெயர்வு இடம்பெற்ற நூற்றாண்டு

அ) 10ஆம் ☐ ஆ) 16ஆம் ☐
இ) 9ஆம் ☐ ஈ) 7ஆம் ☐

20. தமிழினம் என்பது

அ) திரிதற்புணர்ச்சி ☐ ஆ) தோன்றற்புணர்ச்சி ☐

இ) இயல்புப்புணர்ச்சி ☐ ஈ) கெடுதற்புணர்ச்சி ☐

21. போல, ஒப்ப, அன்ன போன்றன

அ) சாரியைகள் ☐ ஆ) உவமை உருபுகள் ☐

இ) வேற்றுமை உருபுகள் ☐ ஈ) விகுதிகள் ☐

22. ஊடகம் அல்லாதது

அ) வானொலி ☐ ஆ) நூலகம் ☐

இ) செய்தித்தாள் ☐ ஈ) தொலைக்காட்சி ☐

23. குமரன் தோட்டத்தில் வெற்றிலை நட்டான். இச்சொல்லியத்தில் வந்துள்ள ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) சினையாகுபெயர் ☐

இ) தொழிலாகுபெயர் ☐ ஈ) காலவாகுபெயர் ☐

24. கட்டினான் என்ற வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றினால்

அ) கட்டி ☐ ஆ) கட்டியவன் ☐

இ) கட்டு ☐ ஈ) கட்டுவித்தான் ☐

25. துய்த்தல் என்பது

அ) இன்புறுதல் ☐ ஆ) துன்புறுதல் ☐

இ) அழுதல் ☐ ஈ) மருளுதல் ☐

26. ''மங்கிக்கிடக்கும் தமிழை - மீண்டும் மாளிகை ஏற்றி வணங்கியே சாவேன்'' என்று கூறியவர்

அ) காசிஆனந்தன் ☐ ஆ) கண்ணதாசன் ☐

இ) பாவேந்தர் ☐ ஈ) முடியரசன் ☐

27. குற்றியலுகர எழுத்துகளில் ஒன்று

அ) லு ☐ ஆ) ழு ☐

இ) து ☐ ஈ) வு ☐

28. பொதுமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) காகம் ☐ ஆ) ஆறுவதுசினம் ☐

இ) படி ☐ ஈ) தங்கை ☐

29. அம்மாவிடம் குழந்தை தவழ்ந்து சென்றது. இச்சொல்லியத்தில் இடம் பெற்ற வேற்றுமை

அ) மூன்றாம் ☐ ஆ) ஏழாம் ☐

இ) ஐந்தாம் ☐ ஈ) ஆறாம் ☐

30. பின்வருவனவற்றுள் எதிர்கால இடைநிலைகள்

அ) த் ப் ட் ☐ ஆ) ப் வ் ☐

இ) கிறு கின்று ☐ ஈ) த் ட் ற் இன் ன் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இவ்வுலகைப் போன்று வேறு கோள்களிலும் மாந்தர் வாழ்கின்றனர் என்பதை அறிய அறிவியலாளர் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக நாசா விண்வெளி ஆய்வகம் செவ்வாய்க் கோளுக்கு அனுப்பிய சர்வேயர் விண்கலத்தில் தமிழில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிவட்டு ஒன்றையும் சேர்த்து அனுப்பியது. ஏனென்றால், தமிழ் மிகமிகத் தொன்மையான மொழி என்பதால் வேற்றுலக வாசிகளுக்கு அது தெரிந்திருக்கலாம் என்று நாசா கருதியுள்ளது. மேலும், அமெரிக்க எல்லையில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சியின் நுழைவாயிலில் "நல்வரவு" எனத் தமிழில் எழுதிவைக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான 'நயாகரா'வில் மிகத்தொன்மையான தமிழ்மொழியைப் பதிவு செய்துள்ளோம் என அந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றனர். இவ்வாறு மேற்குலகத்தால் போற்றிப் புகழப்படும் தமிழ்மொழி எமது தாய்மொழி எனும்போது அது எமக்குப் பெருமையே!

1. நாசா விண்வெளி ஆய்வகம் அனுப்பிய விண்கலத்தின் பெயரென்ன?

2. விண்கலம் எக்கோளுக்கு அனுப்பப்பட்டது?

3. விண்கலத்தில் அனுப்பப்பட்ட பொருள் யாது?

4. "நல்வரவு" என்ற சொல் எங்கே எழுதப்பட்டுள்ளது?

5. நாசா தமிழ்மொழியை முதன்மைப்படுத்தியதன் காரணம் என்ன?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. குமரிக்கண்டம் ஆய்வாளரினால் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

_______________________________________________

2. மருதநில அரங்கில் ஆடலுக்கான முழவுகளாக எவை முழங்குகின்றன?

_______________________________________________

3. நானிலப் பாகுபாட்டில் கருப்பொருள் எனக் குறிப்பிடப்படுபவை யாவை?

_______________________________________________

4. மட்டக்களப்பு மண்ணில் தோன்றிய பெரும் புலவன் யார்?

_______________________________________________

5. எட்டுத்தொகை நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

6. நேற்றுத் தமிழர் எப்படி வாழ்ந்ததாகக் காசிஆனந்தன் எடுத்துரைக்கிறார்?

_______________________________________________

7. ஆரியர் எந்நாட்டின் வழியாக நாவலந்தீவினுள் நுழைந்தனர்?

_______________________________________________

புள்ளிகள் 10



TEDC

**4. பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

நல்ல நட்பைத் தேடிடுவோம்
நாம் நல்லவர்களாக வாழ்ந்திடுவோம்

கண்மூடித் தூங்கும் மாவீரரே - உங்கள்
கனவு எங்கள் கைகளிலே

புள்ளிகள் 10

TEDC

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

அ) செயப்படுபொருள் குன்றிய வினை

______________________________

ஆ) ஏவல் வினை

______________________________

2. பின்வருவன எவ்வகைத் தொகையென எழுதுக.

கருங்குழல் ____________

ஏவுகணை ____________

மோர் குடித்தான் ____________

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

காரண இடுகுறிப்பெயர் ____________

இறந்தகாலப்பெயரெச்சம் ____________

வியங்கோள்வினை ____________

4. செய்வினைச் சொல்லியம் ஒன்று எழுதி, அதனைச் செயப்பாட்டு வினைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

______________________________

______________________________

5. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக.

மண் + சாடி ____________

வயல் + கரை ____________

பணம் + வரவு ____________

புள்ளிகள் 15

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. பாண்டியன் புலவருக்குப் ________________ வழங்கினான்.
   ( பொற்கிளி, பொற்கிழி )

2. மாவீரர் நாளன்று துயிலும் ________________ ச் சென்று வழிபட்டனர்.
   ( இள்ளத்திற்கு, இல்லத்திற்கு )

3. வந்தாரை வரவேற்று நொந்தாரைத் தாங்குவது தமிழ் மண்ணின் ________________ ஆகும்.
   ( மான்பு, மாண்பு )

4. வீட்டிலிருந்து வெகு ________________ எறிகணை விழுந்த ஒலி கேட்டது.
   ( தொலைவில், தொளைவில் )

5. பாரதி கண்ட புதுமைப்பெண் அஞ்சாத ________________ கொண்ட நெஞ்சினள்.
   ( உருதி, உறுதி )

புள்ளிகள் 05



TEDC

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் புலப்பெயர்வு
- ✸ வளி (காற்று)
  - ➢ வளியின் அகத்தியம்
  - ➢ வளிமாசுபடுத்தலுக்கான காரணங்கள்
  - ➢ அதைத்தடுப்பதற்கு நீர் கூறும் வழிகள்
- ✸ புலம் பெயர் தேசத்தில் தமிழ்க்கல்வி
  - ➢ தமிழ்க்கல்வியின் இன்றியமையாமை
  - ➢ நீர் தமிழ் படிப்பதன் நோக்கம்
  - ➢ நீர் விரும்பிய கல்வித்துறையும் பயன்பாடும்

புள்ளிகள் 20

TEDC

TEDC